உ

வீரர்முனை

# சிந்தாயாத்திரைப் பிள்ளையார் வரலாற்றுப் பத்து சீர்பாதகுல வரலாற்றுக் கும்மி



ஆக்கம்

வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



இனிய தமிழ்பேசும் ஈழத்திரு நாட்டில் வாழும் அன்பான தமிழினமே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நான் கவிஞ்ஞனும் மில்லை புலவனுமில்லை, கல்வியை கசடறக் கற்றவனுமில்லையென்று நான் இதுவரை வெளியிட்ட சிறு சிறுநூல்களில் என்னுரையில் எழுதியுள்ளேன். ஆனால் இப்போது வரலாற்றை கற்றவனுமல்ல வழிகாட்டி மரமுமல்ல என்று எழுதுகின்றேன். எமது இனத்தவர்கள் பாரதநாட்டிலிருந்து ஈழநாட்டிற்கு எப்படி வந்தார்கள் என்று பல நூற்றாண்டுகளுக்குமுன் நடந்தவற்றை ஏடுகளில் செப்பேடுகளில் ஏன் கல்லில் கூட எழுதிவைத்துள்ளனர்.

அவைகளை அன்று அவர்கள் சேமித்து பாதுகாப்பாக வரும்கால சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு பாதுகாத்து வைத்தார்கள் அவற்றை அமரர் கலைஞானி அருள்.செல்வநாயகம் அவர்கள் எங்கெங்கெல்லாம் அந்த பொக்கிசங்கள் உள்ளதோ அங்கெல்லாம் சென்று அவைகளை எல்லாம் அலசி ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரையை சென்னை மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராட்சி மகாநாட்டில் பங்குபற்றி முதல் நாள் அன்று அதை வாசித்து உலகறியச் செய்தார்.

அதன் பின் அந்த அறிவுச்சுடர் சீர்பாத குல வரலாறு என்னும் நூலை எழுதி வெளியிட்டார் அந்த நூலிலொன்று எனது கரத்தில் 2008ம் ஆண்டு கிடைத்தது அத்தோடு வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தால் வெளியிடப்பட்ட சீர்பாத சரித்திரம் என்னும் நூலும் என் கரம் கிடைத்தது. ஆனால் கண்ட நூலைஎல்லாம் கவிதையாக்க விரும்பும் நான் இரு நூல்களிலும் காணப்பட்ட ஒரு சில கருத்துக்களை கவிதையாக்கி சிந்தாயாத்திரைப் பிள்ளையார் வரலாற்றுப் பத்து என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பாத குல வரலாற்றுக் கும்மி என்றும், உருவாக்கி இது உங்கள் கரங்களிலும் தவழ வேண்டும் என்ற நோக்கத்தோடு வெளியிடுகின்றேன்.

இதில் எதும் தவறுகள் இருந்தால் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு எனக்கு புரியாதவற்றை உணர்த்த வேண்டு மென்று தலை தாழ்த்தி கேட்டுக் கொள்கின்றேன்.

**01.09.2009**

இது
**வைரமுத்து கணேசன்**
கலைமகள் வீதி
சேனைக்குடியிருப்பு - 02
கல்முனை.
T.P : 0719238566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிந்தாயாத்திரைப் பிள்ளையார் வரலாற்று பத்து

01. அலைகடலின் அடியில் அமர்ந்தது போதுமென்று
சிலைவடிவமாய் வந்த சிந்தாயாத்திரைப் பிள்ளையாரை -தலைதாழ்த்தி
அன்போடு பணிந்தேன் ஆனைமுகா இக்கதைக்கு
பண்ணோடு பல பொருளும்தா

02. அரனாரின் முதல் மகனே அடியேன் நானும்
அன்னை சீர்பாததேவி அன்று வந்த
வரலாறு கூறுதற்கு அருள்புரிந்து
வரம் தருவாய் என் மீது கருணை கொண்டு
பாரத நாட்டான்ட சோழன் புத்திரி
பயணித்த கப்பலிலே ஏறிவந்த
பரம்பொருளே சிந்தாயாத்திரைப் பிள்ளையாரே
பசுபதியே மனமிரங்கி அருள்செய்வாயே

03. ஆழ்கடலில் பயணித்த கப்பல் தன்னில்
அமர்ந்திருந்த சீர்பாத தேவியாரும்
வாழ்பதியே கரையோரப் புதுமைகாண
வருகுது கண் ஆசையெனக் கென்று சொல்ல
மகிழ்ந்துமே மன்னவனனும் கிழக்கேயே
மனமுவந்து கோணேசர்பதி வணங்கவைத்த
எழ்மைமிகு சிந்தாயாத்திரைப் பிள்ளையாரே
எழில் வடிவே மனமிரங்கி அருள்செய்வாயே

இதுவரை ஓடி வந்த கப்பல் நிற்க
இது என்ன அதிசயம் என நினைத்து
சேதுவிலே சிந்தனை இறக்க வைத்து
செயலெதுவோ அறிந்துவா எனப்பணிக்க
புது உணர்வு பெற்றவன் போல் நீரிலாழ்ந்து
புதுமையாய் விநாயகர் இருக்குதென்று
காதினிக்க சிந்தனால் எடுத்துரைக்க வைத்த
கரிமுகனே மனமிரங்கி அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் மகன் இருக்கிறார் எனவுணர்ந்து
இருந்தவர்கள் அரகரா கோசமிட்டு
பாசமுடன் எடுத்து வந்து சேருமென்று
பகர்ந்தவுடன் சிந்தனும் மீண்டும் சென்று
ஆசையுடன் அணைத்தெடுத்து தூக்கிவந்து
அன்னையவள் முன்னாலே அமரவைத்த
தேசம்புகழ் சிந்தாயாத்திரைப் பிள்ளையாரே
தேசிகனே மனமிரங்கி அருள்செய்வாயே.

உன்விருப்பம் எங்கேயோ அங்குசென்றால்
உளம்மகிழ ஆலயம் அமைப்போமென்று
சொன்னவுடன் கப்பலையே நகரவைத்து
சொகுசான மட்டுநகர் வாவிகாண
என்விருப்பம் இங்கேதான் இருக்குதென்று
ஏதேனும் தடையின்றி ஓடவைத்த
அன்புருவே சிந்தாயாத்திரைப் பிள்ளையாரே
அருள்வடிவே மனமிரங்கி அருள்செய்வாயே

ஊர்மக்கள் உவகையுடன் வாழ்வதற்கு
உகந்த இடம் இதுவென உணர்ந்து கொண்டு
பேர்பெற்ற வீரர்கள் அன்று வாழ்ந்த
பெருமையுள்ள வீரர்முனைக் கரையை நாட
சீர்சிறப்பு அத்தனையும் பெற்றுவாழ
சிறந்த இடம் இதுவெனத் தேர்ந்தெடுத்த
பார்போற்றும் சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
பரம் பொருளே மனமிரங்கி அருள்செய்வாயே

எல்லாமும் நல்லபடி அமையக்கண்டு
எழிலரசி சீர்பாத தேவியாரும்
நல்லதோர் இடம் தன்னைத் தேர்ந்தெடுத்து
நாயகரே இன்று இதில் அமருமென்று
சொல்லிவிட்டு வந்தவர்க்கும் இடத்தைக் காட்டி
சொந்தம் போல் எல்லோரும் அமருமென்ற
வல்லவனே சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
வாலகணபதியே மனமிரங்கி அருள்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிவந்த கலம்விட்டு இறக்கிவைத்து
ஏற்படி திருக்கோயில் அமைப்பதற்கு
அறிவு தமிழ்ச் சோதிடர் தனையழைத்து
ஆனைமுகன் ஆலயத்திற் கிடமும் கண்டு
சாறெடுத்த கரும்புசக்கை களைத்தாப் போலே
சடுதியிலே ஆலயம் அமைக்க வைத்த
கூறுதமிழ் சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
குஞ்சரனே மனமிரங்கி அருள்செய்வாயே

ஐங்கரனை ஆலயத்தில் அமரவைத்து
அபிசேகம் அனைத்தையும் தான்முடித்து
பங்கமின்றி எங்களைக் காக்க வந்த
பரம்பொருளின் ஆலயத்தேவைக்கென்று
தங்கம்விளை நெற்காணி சாசனமும்
தரமான பணிப்பொருளும் வழங்கிவைத்த
மங்காப்புகழ் சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
மால்மருகா மனமிரங்கி அருள்செய்வாயே

ஒற்றுமையாய் மக்களெல்லாம் வாழ்வதற்கு
ஒழுங்கான வழிவகை அமைக்கவென்று
பற்றோடு வாலசிங்கன் அனைவருக்கும்
பாரினிலே சீர்பாத குலத்தாரென்ற
நற்பேறு விருதுகளும் தான்வழங்கி
நலமுடன் இவ்வூரில் வாழ்கவென்ற
கற்பகமே சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
கணபதியே மனமிரங்கி அருள்செய்வாயே


ஓசைஒலி எல்லாமே உள்ளடக்கி
ஓங்காரப் பொருளான விநாயகர்க்கு
பூசைபுனர்க்கார மெல்லாம் செய்வதற்கு
புகழ்பெற்ற சிந்தனையே தான்பணிந்து
ஆசையுடன் தான்வணங்கி வந்தவேலை
அன்னையவள் சிந்தனுக்கே கொடுக்கவைத்த
பாசமுள்ள சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
பரம்பொருளே மனமிரங்கி அருள்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையைக் கைலாயம் அன்று சேர்த்த
ஆனைமுகா சீர்பாத தேவியோடு
இவ்விடத்தில் வந்தமர்ந் திருக்கவென்று
இன்பமுடன் கப்பலில் ஏறிவந்து
திவ்வியமாய் வீரர்முனைப் பதியமர்ந்து
தினம்தோறும் மக்களுக் கருள்வழங்கும்
செவ்வைசேர் சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
திருமால் முருகா மனமிரங்கி அருள்செய்வாயே

அக்காலம் நடந்த கதை இன்னதென்று
ஆதியிலே உள்ளோர்கள் எழுதிவைக்க
முக்காலும் உணர்ந்த பெரியோர்கள் மற்ற
முதுமையிலே சிறந்தவர்கள் இதைவிளக்க
இக்கால மக்களிதை உணர்ந்து கொள்ள
இயன்றவரை என்னையும் பாடவைத்த
வித்தகனே சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே
விநாயகனே மனமிரங்கி அருள்செய்வாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்பாதகுல வரலாற்றுக் கும்மி

வேதமுதல்வனே வித்தகனே - கவி
வித்தைக்கருள் தரும் வல்லவனே
நாதனே ஐங்கரப் பிள்ளையாரே - உன்னை
நம்பினேன் என்னாவில் வாருமையா

சிந்தா யாத்திரைப் பிள்ளையாரே - உந்தன்
சிந்து வரலாறு நான் பாட
தந்திடு நற்கவி தந்திமுகா - ஒரு
தப்புப் பிழையுமே நேராமல்

கோணமாமலை வந்தமர்ந்து - நல்ல
கொஞ்சும் தமிழோசை கேட்டிருக்கும்
கணநாதன் தந்தையே கசடறுத்து - எந்தன்
கருத்தில் வந்து அமருமையா

மழலை கேட்டு மகிழ்ந்திருக்கும் - கலை
மாதே சரஸ்வதித் தாயாரே
அழகிய செந்தமிழ்ப் பாகூற - எந்தன்
அடிமனதில் அமருமம்மா

01. பண்டைத் தமிழர் குருநாடாம் - அந்த
பாரத நாட்டிலே வந்துதித்து
ஆண்டபரம்பரை சோழர்கதை - கூற
அன்னையரே அருள் தாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. இசையோடு தமிழ்பாடும் சோழநாட்டை - அன்று
இன்பமுடன் ஆட்சி செய்துவந்த
திசையுக்கிர சோழனுக்கு - அன்று
செல்வமகளாய் அவதரித்து

03. குன்மநோய் குதிரை முகத்தோடு - அந்த
குமாரத்திவந்து தானுதிக்க
என்னதான் பாவம் செய்தேனோ - என்று
ஏங்கினார் மன்னனும் மற்றோரும்

04. ஆண்டவன்தான் உன்னைக்காக்க வேண்டும் - என்று
ஆனந்தமாக அணைத்தெடுத்து
இன்பமாய் மாருதப் புரவீகவல்லி - என்ற
இனிய நாமமும் சூட்டினரே

05. தீராத குன்மநோய் தொட்டதினால் - அவள்
செய்யாத வைத்தியம் பலசெய்தும்
தீராது என்று அவளறிந்து - இனி
தீர்த்தயாத்திரை செய்வோமென்று

06. பற்றோடு என்நோயைத் தீருமென்று - அவள்
பலபல தீர்த்தங்கள் ஆடினாலும்
சற்றும் குறையாமல் இருக்கையில் - அன்று
சாந்தலிங்கமுனி தன்னைக்கண்டு

07. இன்நோய்க்கு மருந்தென்ன சுவாமி என்று - அவள்
இரங்கியே முனிபாதம் தான்பணிய
அன்போடுமாமுனி கருணை கொண்டு - நல்ல
ஆனபரிகாரம் சொல்லற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. தமிழக தீர்த்தங்கள் தீராது - இது
தானாகத்தீரத் தீர்த்தமுண்டு
ஈழமணித்திரு நாட்டினிலே - தான்
இருக்குது நகுலேசர் தீர்த்த மென்றார்

09. அன்னையார் நீராட வேண்டுமென்று - அன்று
ஆதிசிவனால் உருவான
புண்ணிய தீர்த்தம் இருக்குதம்மா - அங்கு
போனாலே எல்லாமே தீர்ந்துவிடும்

10. நகுல முனிவரின் கீரிமுகம் - மற்ற
நளமகா ராசனின் சாபமெல்லாம்
வெகுவாக குணமாகிப் போன தென்றால் - அதன்
விந்தையை உணர்ந்து கொள்ளுமென்றார்

11. முனிவர் உரைத்த மொழிகேட்டு - அதன்
முக்தியைத் தான்பெற வேண்டுமென்று
கனிவோடு விடையும் தான் வாங்கி - அந்த
கண்ணுதற் பெருமானை நெஞ்சில்வைத்து

12. தந்தை தாய் காலடிதான் வணங்கி - பின்பு
தன்நோக்கம் தன்னை எடுத்துரைக்க
சிந்தை கலங்கிய மன்னவனும் - உன்
சித்தம்போல் சென்று வாருமென்று

13. மகழுக்குதவியாய்ப் பலபேரை - அன்று
மன்னன் அழைத்துக் கலமேற்றி
சுகமாகி என்மகள் வரும் வரைக்கும் நீங்கள்
சுற்றம்போல் அங்குபோய் வாருமென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஈழத்தின் வடக்குக் கரைநோக்கி - கப்பல்
இனிதேவந்து கரைசேர
இழவரசியும் தானிறங்கி - அங்கே
இறைவன் பதியைத் தான் தேடி

15. அன்போடுகீரி மலை நாடி - அவள்
ஆண்டவன் பாதம் தான்பணிந்து
குன்மநோய் தீர்த்திட வேண்டுமென்று - பேதை
கும்பிட்டழுதுமே வேண்டிநின்றாள்

16. என்னருள் என்றும் உனக்குண்டு - என்ற
எம்பிரான் சந்நிதி நின்மதியால்
அன்று முதல் அவள் நேர்த்திவைத்து - அரன்
அடியினை நித்தம் தான் வணங்கி தான்தீர - அவள்

17. சூரியன் கண்ட பனிபோல - ஒளி
சுடச்சுடக்காய்ந்து போவது போல்
காரிகையாள் நோயும் தான்தீர - அவள்
கட்டிளங் குமரியாய் மாறினாளே

18. பூரணமாகவே நோய்தீர - அவள்
பூரித்து ஓலை தானெழுதி
நேர்த்தியை நிறைவேற்றிவைப்பதற்கு - அப்பா
நிச்சயம் ஆலயம் நானமைக்க

19. ஆச்சாரி மாரோடு பணிப்பொருளும் - மற்ற
ஆட்களும் உடனே எனக்கனுப்பி
கச்சிதமாக முடித்து வைக்க - அப்பா
கருணை உள்ளம் கொண்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. மடலைக்கண்ட தந்தையாரும் - பெரும்
மகிழ்ச்சி வெள்ளத்தில் தானீந்தி
உடனே பணியைச் செய்வதற்கு - அவர்
உறுதி பூண்டு கொண்டனரே

21. இப்படியிருக்கும் வேளையிலே - அன்று
இனிதாகக் கதிரமலையிலிருந்து
எப்போதும்போல் வணங்குவதற்கு - மன்னன்
எம்பிரான் சந்நிதி தேடிவந்தான்

22. எக்காலும் நகுலேசர் தாழ்பணிந்து - அவர்
ஏற்ற அருளென்றும் பெற்றுவந்த
உக்கிர சிங்கனின் கண்களிலே - அந்த
உத்தமியாளும் சிக்கினளே

23. ஆண்டவன் மேலே மையல்கொண்டு - அந்த
ஆரணங்கு விழிதான் மூடி
மன்றாடி உள்ளம் மிகவுருகி - அவர்
மலரடி பணிந்து நின்றதனை

24. கண்ணுற்ற மன்னவன் மெய்மறந்து - இந்தக்
காரிகையாளை அறியேனென்று
எண்ணத்தில் காதல் ஊற்றெடுக்க - நெஞ்சில்
எல்லையற்ற மோகம் மேலோங்க

25. படைக்கஞ்சா வெற்றி வீரனவன் - அந்த
பாவையைக்கண்டு பதுமையைப்போல்
எடைபோட்டுக் கொண்டே அவனிருந்தான் - அவள்
எப்போது கண்கள் திறப்பாளென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஆண்டவன்பூசை தான்முடிய - அந்த
ஆரணங்கு விழி தான்திறக்க
கண்டாளே காளையை முன்னாலே - அவன்
கண்ணிமைக் காமல் நோக்குவதை

27. நான்குவிழிகளும் தான்கலக்க - அந்த
நாயகி நாணம் மேலோங்க
ஏன்தானோ இந்தத் தொல்லையென்று - அவள்
எதுவுமே பேசாமல் தானடக்க

28. கண்ணிலிருந்து மறையுமட்டும் - அவன்
கண்களிரண்டுமே பின்தொடர
என்னைவிட்டுப் போவதென்ன வென்ற - அந்த
ஏக்கத்தில் மன்னனும் தடுமாற

29. உள்ளேவைத்து இமைமூட - அவள்
உள்ளத்தினுள்ளே போயமர
கள்ளுண்ட வண்டாய் மன்னவனும் - பெரும்
காதல் விரகத்தில் வாடினானே

30. ஆலய தரிசனம் தான்முடித்து - மன்னன்
அரண்மனைசென்று தானமர
வாலிப வேகத்தால் வருத்தமுற்று - அவன்
வாடி வதங்கி நொந்தனனே

31. மன்னவன் வேதனை தானறிந்து - ஒரு
வயதில் முதிர்ந்த மந்திரியும்
எண்ணக் கருத்தை எடுத்துரைத்தால் - மன்னா
ஏற்றபரிகாரம் காண்பேனென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. அமைச்சரின் வார்த்தையைக் கேட்டதுமே - அந்த
ஆணழகன் உக்கிர சிங்கனுமே
சுமை கொஞ்சம் குறைந்தது என்று எண்ணி - அவன்
சுந்தரியாள் கதை கூறினானே

33. முற்று முழுதாகக் கேட்ட பின்பு - அவர்
முழுவதுமே ஆராய்ந்து பார்த்துவிட்டு
பற்றோடு மன்னா சொல்வதைக்கேள் - அவள்
பாழான குன்மநோய் வந்ததினால்

34. ஆயிரம் வைத்தியம் செய்தாலும் - அவள்
அதனால் குணம்காண வில்லையென்று
வாய்விட்டலறி நொந்து வெந்து - இனி
வழியென்ன தெய்வமே என்று சொல்லி

35. பாரத நாடெல்லாம் தீர்த்தமாடி - எந்தப்
பலனுமே கிடைக்காமல் இங்குவந்து
நேராக நகுலேசர் தீர்த்தமாட - அவள்
நினைத்ததுபோல் நோயும் தீர்ந்ததுபார்

36. சோழநாட்டின் இளவரசி - மன்னா
சொந்தப்பேர் மாருதப்புரவீகவல்லி
அழகான குமாரத்தி பாழையத்தில் - அவள்
அமர்ந்து இருக்கிறாள் மன்னவனே

37. அமைச்சர் புகன்றதைக் கேட்டதுமே - அவன்
ஆனந்தம் இன்னும் மேலோங்க
இமைமூடும் நேரத்தில் அங்குசென்று - நான்
இப்போதே அவளைப் பார்ப்பேனென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. நள்ளிரவு நேரம் மன்னவனே - இப்போ
நாமங்கு போவது நீதியல்ல
எள்ளளவு அவள் சத்தமிட்டால் - பின்பு
எல்லாமே விபரிதமாகிவிடும்

39. இன்னுமொருவழி இருக்கிறது - மன்னா
இப்படிச் செய்தால் நல்லதுதான்
தன்னை மறந்தவள் தூங்குகையில் - நீயும்
தாவித் தூக்கியே வந்துவிடு

40. ஆலோசனையது நல்லதென்று - மன்னன்
அத்தனை காவலும் தான்தாண்டி
சோலைக்கிளிபோல் எழிலுடைய - அந்த
சுந்தரி உறைவிடம் சென்றனனே

41. மங்கிய ஒளியில் படுத்திருக்கும் - அந்த
மங்கையவள் இன்னும் தூங்காமல்
எங்கோபறக்கும் நினைவோடு - அவள்
ஏங்கித்தவித்துப் புரண்டிருந்தாள்

42. ஆலயம் தன்னிலே கண்டுவந்த - அந்த
ஆணழகன் இன்னும் வந்து வந்து
வேல்விழி முன்னாலே நிற்பதனால் - அவள்
விழிமூடித்தூங்க முடியாமல்

43. புரியாத ஏதோ புது உணர்வு - நெஞ்சில்
புகுந்து வேதனை செய்ததினால்
அறியாததேதோ ஆட்டிவைக்க - அவள்
அங்கமெல்லாமே துடிதுடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. உள்மனதிலே வந்தமர்ந்த - அந்த
உத்தமன்யாரோ எனநினைத்து
பள்ளிகொள்வோமே சற்று என்று - அவள்
படுத்துறங்கும் வேளையிலே

45. கள்ளத்தனமாக வந்து நின்ற - அந்தக்
கதிரமலையின் காவலனும்
அள்ளியே தோழிலே போட்டுக்கொண்டு - அவன்
அமரும் இடம்நோக்கிச் சென்றனனே

46. தூக்கிவந்த அந்தத் தோகையரை - மன்னன்
துயரொன்றும் செய்யாமல் பஞ்சணையில்
பாக்கிய லெட்சுமி உறங்குமென்று - அங்கு
பற்றோடு காவலில் நின்றனனே

47. அரைகுறை நித்திரை தான்போக - அவள்
அதற்கிடையிலே கண்விழிக்க
அறையும் வேறாய்த் தானிருக்க - அப்போ
அதிர்ச்சியால் விழிகள்தான் உருள

48. எங்கே இருக்கிறோம் என்று எண்ணி - அவள்
ஏக்கத்தில் திரும்பிப் பார்க்கையிலே
அங்கேநின்றான் வெற்றி வீரன் - நல்ல
ஆணழகனெனும் கட்டழகன்

49. கண்டதும் கண்ணே நீ அஞ்சாதே - நான்
கதிரமலையின் காவலன் தான்
கொண்டேனே பெரும்காதல் உன்மீது - இனி
கோதையே உன்னை மணக்கவென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. முத்தானவாயை நீதிறந்து - நல்ல
உத்தாரமொன்று சொல்லாவிட்டால்
பித்தனாய் நானும் தானலைய - இப்போ
பிரமைபிடித்துக் கொண்டதென்றான்

51. நட்டநடுச்சாம வேளையிலே - வந்து
தொட்டுத்தூக்கி வந்தவனை
கட்டினால்தானே பெருமையென்று - அந்த
காரிகையாளும் சம்மதித்து

52. கடமைகள் என்னைக் காத்திருக்கு - அவை
கட்டாயம் நிறைவேற்றி வைத்தபின்பு
தடையின்றித் திருமணம் செய்திடலாம் - என்று
சாற்றிய வார்த்தை கேட்டவுடன்

53. பாலாற்றிலே நீந்திக் கரையேறி - வந்து
தேனள்ளியுண்டு மயங்கினாப்போல்
வேல்விழியாள் கரம்பற்றிக் கொண்டு - மன்னன்
வேண்டுதலெல்லாம் கேளுமென்றான்

54. நீராதநோய் யெல்லாம் தீர்த்துவைத்த - அந்த
சிவகுமாரன் வீற்றிருக்க
பேர்பெற்ற ஆலயம் அமைப்பேனென்று - இந்தப்
பேதையும் உறுதி கொண்டாளேனென்றாள்

55. முன்னின்று நானும் முடித்துவைக்க - முழு
மூச்சாக நின்று ஒத்துழைப்பேன்
கண்ணே நான் கூட இருக்குமட்டும் - எந்தக்
கவலையும் வேண்டாம் எனவுரைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. இருமனம் ஒருமனம் ஆனதுபோல் - அங்கே
இன்புற்றிருக்கும் வேளையிலே
மாருதப்புரவீகவல்லி தனைத்தேடி - அப்போ
வந்தனர் தோழியர் வேகமதாய்

57. உக்கிரசிங்கன் தோழியர்க்கு - நல்ல
உத்தாரமான வார்த்தைசொல்லி
சீக்கிரம் உங்கள் மன்னவர்க்கு - நீங்கள்
திருமண ஓலை அனுப்புமென்றான்

58. சோழமன்னன் இதையறிந்து - நம்
சொந்தமும் அங்கே தேவையென்று
வாழத்துடிக்கும் இழசுகளை - இனி
வாழவைக்கவும் சம்மதித்தான்

59. மாவிட்டபுரத்தில் கோயில்கட்டி - அங்கே
மகிமை இன்னும் மேலோங்க
தாவிமயிலேறும் காங்கேயன்சிலை - எல்லாம்
தாரளமாக அனுப்பிவைத்தான்

60. காசான் துறையென்னும் துறையினிலே - அன்று
காங்கேயன் சிலைவந் திறங்கியதால்
காசான் எனும் பெயர் மாறி - அது
காங்கேயன் துறையாய் மாறினதே

61. வனிதையார் அமைத்த ஆலயத்தில் - அன்று
வந்தகாங்கேயன் சிலைவைக்க
ஆனிஉத்தர நன்னாளிலே - பெரும்
அபிசேகம் செய்து வைத்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. மன்னனும் தேவியும் மனமகிழ்ந்து - தங்கள்
மனம்போலத் திருமணம் தான்முடித்து
எண்ணம்போல் கதிரமலை சென்று - அங்கு
ஏற்றபடி வாழ்க்கை தானடத்தி

63. கண்ணின் மணியாய் இருகுழந்தை - அந்த
காரிகையாளும் ஈன்றெடுத்து
அன்போடு வால சிங்கனென்றும் - நல்ல
அழகியாம் செண்பக வல்லியென்றும்

64. நாமங்கள் சூட்டி வளர்த்து வர - மக்கள்
நாளொரு மேனியாய்த் தான்வளர
தேன்மதுரக் கல்வி தான்புகட்ட - மன்னன்
தெரிந்து ஆசானைத் வரவழைத்து

65. அரசர்க்குரிய கலைகளெல்லாம் - அவன்
அணுவும் பிசகாமல் தான்பயின்று
வரம்பெற்ற முனிவர் ரிஷிகளெல்லாம் - கண்டு
வாழ்த்தி வணங்கி அடிபணிய

66. இளவரசனாய் வரவிருக்கும் - அந்த
இளங்சிங்கம் வாலிசிங்கனுக்கு
பழுத்த பழமான முனிவரெல்லதம் - அன்று
பறக்கும் சக்தியும் தான்கொடுத்தார்

67. அத்தனை சக்தியும் பெற்றுக்கொண்ட - அந்த
ஆணழகன் வால சிங்கனுமே
சித்தம் மகிழ்ந்து இருக்கையிலே - தந்தை
சேதி ஒன்றுமே செப்பலுற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. வயதும் எனக்குச் சரியாச்சி - இனி
வானுலகம் செல்ல நாளாச்சி
புயபலம் உனக்கு வந்தாச்சி - மகன்
பூலோக ராச்சியம் தந்தாச்சி

69. என்று புகன்ற மன்னவனும் - இனி
என்பணி முடிந்தது என்றுரைத்து
அன்போடு அழகு முடிசூட்டி - விட்டு
அரனடி அவனும் சேர்ந்த பின்பு

70. மனுநீதி தவறாமல் ஆட்சிசெய்த - அந்த
மன்னன் வால சிங்கனுக்கு
அனுதினம் நல்லாசி தான்வழங்கி - மக்கள்
ஆனந்தக் களிப்போடு வாழ்ந்தனரே

71. ஆசையாய் மக்களைத் தான்காத்து - அன்று
அன்பான ஆட்சி நடக்கையிலே
இசையாலே மனதை கொள்ளை கொள்ளும் - ஒரு
இசைஞானி அவைக்கு வந்தனனே

72. ஆழ்கடல் கடந்து நான்வாறேன் - உந்தன்
அருமைபெருமையை நானறிந்து
யாழ்பாடி எந்தன் பேராகும் - இனி
நானுன்னைக் கண்டது போதுமென்றான்

73. ஊழ்வினை தன்னால் விழியிழந்து - இந்த
உலகையே பார்க்க முடியாத
யாழ்பாடி வித்துவான்வரவுகண்டு - மன்னன்
எழிலான கானத்தைக் கேட்போமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. தக்கமரியாதை தான் கொடுத்து - மன்னன்
தலைவாசல் சென்று வரவேற்று
எக்காலும் அழிவிலா இசை வடிவே - இனி
எம்மை மகிழ்விக்க வேண்டுமென்றான்

75. கல்லும் கரையும் இசைமழையை - அந்த
கண்ணற்ற யாழ்பாடி தான் பொழிய
எல்லாம் இசைமயமாய் விளங்க - அங்கே
எல்லோரும் இன்புற்றுத்தானிருக்க

76. அதிசயம் கண்டு மன்னவனும் - பெரும்
ஆனந்தக்களிப்பு மேலோங்க
மதிப்புள்ள பற்பல பரிசுகளும் மற்றும்
மகிழ்வோடு மணல்பிட்டியெனுமூரும்

77. தந்தேன் உனக்கு என்று சொல்லி - மன்னன்
சாசனம் செய்து தான் கொடுக்க
எந்தன் பரிசையும் ஏற்றுக்கொள்ளும் - என்று
ஏதோவோர் வணிகன் தான் கொடுத்த

78. ஓவியப்பாவையின் ஓவியத்தை - அவன்
உவந்து மன்னன் தனக்களித்து
சீவியகாலமும் வாழ்வே னென்று - அவன்
திருப்தியாய் மணல்பிட்டிதனை நாடி

79. சாதி சனமெல்லாம் வரவழைத்து - அன்று
சங்கடமின்றி நிலம் திருத்தி
மதியொழிபோல வாழ்ந்த இடம் - இன்று
மதிப்புள்ள யாழ்ப்பாணம் ஆனதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80 யாழ்பாடி கொடுத்த பரிசுதனை - மன்னன்
மகிழ்வோடு பிரித்துத் தான்பார்த்து
ஆழ்கடல் முத்தோ எனவியந்து - அவன்
அசையாமலே அப்படி நின்றனனே

81. அத்தனை அழகையும் ஒன்றாக்கிப் - பிரமா
அங்க அசை வெல்லாம் வார்த்தெடுத்து
இந்த மங்கையைப் படைத்திருக்கார் - இவள்
எங்கு இருக்காளோ நானறியேன்

82. வானுலகை விட்டு வந்தவளோ - இல்லை
வடிவமே இப்படி அமைந்தவளோ
மானினம் தன்னோடு ஒத்தவளோ - இவள்
மங்கையர் திலகமாய் வந்தவளோ

83. என்று மன்னவன் தான் வியந்து - இவள்
எங்கு இருந்தாலும் தேடிச் சென்று
கண்ணாலே ஒருமுறை பார்க்கவேணும் - அந்தக்
காரிகை தன்னை நான் கூடவேண்டும்

84. கணநேரம் மனது நிற்குதில்லை - இந்த
கன்னியின் ஓவியம் கண்டதுமே
மணத்தால் இவளை மணக்கவேணும் - இல்லை
மண்ணோடு மண்ணாய் மறையவேண்டும்

85. காமம் தலைக்கேறி மன்னவனும் - தன்
கடமை கட்டளை தான் மறந்து
ஏமாந்த நிலையை விட்டு விட்டு - மன்னன்
எதற்கும் அமைச்சரை கேட்போமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. ஆலோசனையின் குருவான - தன்
அமைச்சரை மன்னன் வரவழைத்து
நாலானதிக்கும் ஆராய்ந்து - இந்த
நங்கை இருப்பிடம் காணவேண்டும்

87. என்று புகன்ற மன்னவனும் - அந்த
ஏந்திளையாள் படம் தான் கொடுக்க
கண்டதும் அமைச்சர் சிரித்துவிட்டு - நல்ல
கண்ணான உத்தாரம் சொல்லலுற்றார்

88. மன்னா என் சொல்லைக் கேட்கவேண்டும் - இவள்
மங்காப் புகழோடு வாழ்ந்து வரும்
குமாரங்குச சோழன் மகள் - பெயர்
குலம் காக்கும் சீர்பாத தேவியென்றார்

89. அமைச்சர் மொழிந்த உரைகேட்டு - மன்னன்
ஆவது வெறொன்றும் இல்லையென்று?
இமைப் பொழுதே அங்கு சென்று நீரும்
இப்போதே சம்மதம் கேளுமென்றான்

90. மன்னவன் சொல்லைத் தான் கேட்டு - அவர்
மறுப்பு ஏதும் கூறாமல்
இன்றுபோய் முடிவோடு நான் வாறேன் - இனி
இன்பமாய் நாட்டை ஆளுமென்று

91. ஏதேதோ பரிசுப் பொருள்பலவும் - மன்னன்
எண்ணம்போல் திருமண ஓலையுடன்
தூதாக அமைச்சரை தானனுப்பி - நீங்கள்
சீக்கிரம் முடிவோடு வாருமென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. இளமையின் வேகத்தால் படுதொல்லை - மன்னன்
இப்போதே தீர்த்திடத் தூதாக
சோழ தேசம் நான் போய்வாறேன் - என்று
சொல்லி அமைச்சரும் தான் ஏக

93. கடலைக் கடந்து அங்கு சென்று - அவர்
கண்ணியம் தவறாச் சோழனிடம்
விடைவாங்க வந்தேன் எனவுரைகக - அங்கே
வீரமாய் நின்ற காவலனும்

94. ஓடோடிச் சென்று மன்னனிடம் -அவன்
ஓலையுடன் ஒரு தூதுவனும்
கடல் கடந்து வந்திருக்கார் - மன்னா
காணச் சம்மதம் தான்கேட்டு

95. மனுநீதி தவறாச் சோழமன்ன - அந்த
மாமன்னன்குமா ராங்குசனும்
அனுமதியோடு வரவழைத்து - மன்னன்
அன்பான உபசாரம் தான்வழங்க

96. அங்கம் குழிர அமைச்சருமே - தான்
ஆசையாய் சுமந்து கொண்டுவந்த
மங்கள ஓலையைச் தான் கொடுக்க மன்னன்
மகிழ்வோடு வாங்கித் தான்பார்த்து

97. சிங்கை நாட்டு மன்னனுக்கு - எங்கள்
சீர்பாத தேவியை மணம் முடிக்க
எங்கள் சம்மதம் என்று சொல்லி - மன்னன்
ஏற்று சோதிடர் தயைழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. நாழும் முகூர்த்தமும் தான் பார்த்து - சோழன்
நல்லதோர் தினத்தைத் தேர்ந்தெடுத்து
வாழும் இளசுகள் சேர்ந்திருக்க - நாம்
வகுத்த தினத்தில் மணம் முடிப்போம்

99. முடிவான செய்தியை தான் சுமந்து - தூதன்
முழுமூச்சாய் ஈழ நாடு வந்து
கொடியிடையாளை மணம்முடிக்க - மன்னா
கொண்டுவந்தேன் நல்ல உத்தாரம்

100. உத்தாரம் சொன்ன அமைச்சருக்கு - மன்னன்
முத்தான பரிசில்கள் தான் வழங்கி
சித்தம் குளிர்ந்தது எந்தனுக்கு - இனி
சீக்கிரம் ஏற்பாடு செய்யுமென்றான்

101. குறித்த நாளும் மிக நெருங்க -மன்னன்
குதுகலம் இன்னும் மேலேங்க
மாறில்லா இனசனம் சூழ்ந்து வர - அவன்
மகிழ்வோடு சோழ நாடேகி

102. பழையறை என்னும் இடத்தினிலே - நல்ல
பாங்கான பழிங்கு அரண்மனையில்
காளையாம் வால சிங்கனுமே - வந்து
காத்து இருந்தானே மங்கை தன்னை

103. காலமும் நேரமும் தான்னெருங்க -அந்தக்
கன்னி மணவறை தான் நோக்கி
நூலிடையாளும் நடந்துவர -மன்னன்
நோக்கியபோதே மங்கையவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. வேல்விழியாலே மன்னவரை -அவள்
விருப்போடு ஓரக்கண் தான் சாய்க்க
வல்லவன் வால சிங்கனுமே - நீயும்
வருகவென்று சமிகை செய்ய

105. மங்கள மேளம் தான் முழங்க - மன்னன்
மகிழ்வோடு மாங்கல்யம் தானெடுத்து
மங்கையின் கழுத்தில் தான்தரிக்க - அங்கு
வந்தவர்கள் வாழ்த்துத் தான்கூற

106. எண்ணம் போல் திருமணம் நடந்த பின்னே
இன்பமாய்ச் சில நாள் வாழ்ந்து விட்டு
அன்பே நாம் ஈழ நாடேகி - அங்கு
அன்பாக வாழலாம் என்று செல்ல

107. பிறந்த வீடினித் தஞ்சமில்லை - இனி
புகுந்த வீடே தஞ்சமென்று
அறம் காக்கும் இல்லாள் தானினைத்து - அதை
அன்னை தந்தைக்கு தானுரைக்க

108. குமாராங்குசனும் நல்லதென்று - நம்ம
குலம்காக்கும் மங்கை தன்னோடு
அரச குடும்பத்தைச் சேர்ந்தவரை - அவன்
அன்பாக அங்கே வரவழைத்து

109. திருவாவூர் பெரும்துறை பழையறையும் - நல்ல
சிறந்தகட்டு மாவடியில்
பெருமையாய் அரசகுலத்தவரும் - மற்ற
அந்தணர் வேளர் வணிகரென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. சிந்தன் பழையன் காலதேவன் -நல்ல
சீர்பெற்ற காங்கேயன் பெண்பழச்சி
வந்ததில் முடவன் வெள்ளாகி - மற்ற
நரையாகி யாரும் மற்றுமுள்ள

111. அந்தணரும் கூடவாருமென்று - மன்னன்
அன்போடு அன்று தான் பணிக்க
சந்திரசேகர ஐயங்கரும் - மற்ற
அச்சுத ஐயங்கர் மனைவிமாரும்

112. வேளாளர் கண்ணப்ப முதலியாரும் - அவர்
விருப்பம்போல் மனைவியும் மற்றோரும்
வாழ்வோம் நாம் ஈழநாட்டிலென்று - அன்று
வந்தோரை இன்னும் சொல்லுகிறோம்

113. முத்து நாயக செட்டியாரும் - மற்ற
முத்தான சதாசிச் செட்டியாரும்
சொந்தம் போல் சங்கரச் செட்டியாரும் - அவர்
சோடியாய் மனைவியும் தான்வரவே

114. இத்தனை பேரும் என் மகளோடு - நீங்கள்
இனிதாக ஈழ நாடேகி
சொந்தம் போல் எல்லோரும் வாழ்கவென்று - மன்னன்
சொல்லியே அன்று வரவழைத்து

115. கர்ண பரம்பரை போன்ற மன்னன் - அந்தக்
கடமை தவறாக் குமாராங்குசனும்
அரனை நினைத்துக் கல மேற்றி - அவன்
அன்பு மகளே நீவாழ்கவென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. நல்லாசி கூறி அனுப்பி விட்டு - அவன்
நடு ஆழி வரையும் பார்த்திருந்து
எல்லாம் இறைவன் செயலென்று - மன்னன்
ஏகினான் தன்னிடம் தான்சேர

117. கடலிலே கப்பல் தானோட - மாது
கண்ணான கணவன் தனைநோக்கி
மடந்தையென் ஆசையொன்றிருக்கு - அதை
மன்னா னிறை வேற்ற வேண்டு மென்றாள்

118. கேட்டதை நிறைவேற்ற நானிருக்க - எந்தன்
கிளிமொழியே நீ அஞ்ச வேண்டாம்
வாட்டத்தை கூறிடு கண்மணியே - என்று
வாலசிங்கனும் தானுரைக்க

119. கரையோரப் புதுமை காண்பதற்கு - நான்
கனநாளாய் ஆசை கொண்டிருந்தேன்
துரையே நீர்வந்தீர் அதைப் போக்க - என்று
துடியிடையாளும் கூறினளே

120. கேட்டதும் மன்னவன் தான்பணிக்க - கலம்
கிழக்குக் கரைநோக்கி தானோட
காட்டினான் ஒவ்வோர் இடங்களையும் - அந்தக்
காரிகையாளும் தான் ரசிக்க

121. பெருமைகள் எல்லாம் தான்கேட்டு - அந்த
பெண் கொடி இன்னும் அகமகிழ
திருமலை கோணேசர் பதி யிதுதான் - என்று
சிரமேலே எல்லோரும் கரம் கூப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. அதுவரை ஓடிவந்த கலம் -அந்த
ஆழியில் நகராமல் தான் நிற்க
புதுமையாய் நங்கூரம் இட்டதுயார் - என்று
புரியாமல் எல்லோரும் தான்வியக்க

123. நின்றதை ஆராய்ந்து பாருமென்று -மன்னன்
நிமிசத்தில் சிந்தன் தனைப்பணிக்க
அன்போடு சிந்தனும் தானிறங்கி - அந்த
ஆழியில் ஆழ்ந்தான் தானறிய

124. காரணம் ஏதும் இல்லாமல் - அவன்
கரிமுகன் தன்னைக் கண்டு கொண்டு
விரைவாக மேலே வந்தவனும் - அங்கே
விநாயகர் இருக்கிறார் என்று சொல்ல

125. கற்பகக் கன்னியைக் கொண்டுவாரும் -என்று
கற்புக்கரசியும் தான் பணிக்க
பற்றோடு சிந்தனும் தூக்கிவந்து -அந்தப்
படகிலே வைத்தான் பக்தியுடன்

126. சிந்துவில் இதுவரை அமர்ந்திருந்து - இப்போ
சிறப்போடு எம்மோடு வந்திருக்கும்
சித்தி விநாயகா நீர் அமரும் - ஒரு
சிறப்பான ஆலயம் அமைப்பதற்கு

127. எங்குவிருப்பமோ அங்குசென்றால் - நாங்கள்
எழில் கொஞ்சும் ஆலயம் தானமைப்போம்
தங்கு தடையின்றிச் செல்ல வேண்டும் - என்று
தையல் நல்லாழும் தானுரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128. அசையாமல் இதுவரை நின்ற கப்பல் - அந்த
அம்மையுரைத்த மொழிகேட்டு
இசைபாடும் அலைகடல் தாலாட்ட - அது
இங்கிதமாகத் தானோடி

129 மட்டு நகர் வாவி கண்டவுடன் - கலம்
மகிழ்ச்சியாகத் தான் திரும்பி
திட்டமிட்டசெயல் செய்வது போல் - அது
திருப்தியாக தானோடி

130 இருமருங்கிலும் பார்த்து வந்து - அவர்
எங்கு இருக்கலாம் எனத்தேர்ந்து
விருப்போடு நானும் அமர்வதற்கு - இந்த
வீரர் முனைதான் சிறந்ததென்று

131. சேர்த்தார் விநாயகர் கப்பல் தன்னை - எந்தன்
திருவுளம் இங்கேதான் உள்ளதென்று
பார்த்தார்கள் வந்தவர் நல்ல இடம் - என்று
பக்குவமாகத் தானிறங்கி

132. அன்பின் உருவே இங்கமரும் - உந்தன்
ஆலயம் அமைக்கும் நாள் வரைக்கும்
என்று புகன்ற தேவியாரும் - தன்
எண்ணம்போல் மக்களை அங்கமர்த்தி

133. மன்னவன் வால சிங்கனுமே - இன்னும்
மக்களை அங்கே வரவழைத்து
எண்ணம்போல் ஆலயம் தானமைத்து - அவன்
ஏற்றதோர் நாளைத் தேர்ந்தெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

134. கும்பாபிசேகமும் தான்முடித்து - அப்பா
குறைவின்றி இங்கே அமருமென்று
தும்பி முகத்தானை வைத்துவிட்டு - மன்னன்
துணையாக வந்தோரைக் குடியமர்த்தி

135. என்னாளும் நித்திய பூசைசெய்ய - நானும்
எண்ணம்போல் சாசனம் தானெழுதி
அன்போடு தருகிறேன் என்று சொல்லி - மன்னன்
ஆலய திருப்பணித் தேவைக்கென்று

136. கிண்ணறையம் வெளி கீற்றுத் துண்டு - மற்ற
கீழ் நீலம் மல்வத்தை வெளி குளமும்
கண்ணான தரவை முன்மாரி - இன்னும்
கரத்தை முன்மாரி சிறு நிலமும்

137. சகலரும் அறிய மன்னவனும் - அன்று
சாசனம் செய்து தான் கொடுத்து
ஏகமனதாக நீங்களெல்லாம் - இங்கு
எப்போதும் ஒற்றுமையாக வாழ

138. அரசர் அந்தணர் வேளாளர் - மற்ற
ஆதாயம் தேடும் வணிகரென்றும்
சீரான செட்டி என்றில்லாமல் - இனி
சிறப்போடு நீங்கள் வாழ்வதற்கு

139. சீர்பாத தேவியின் தன் பெயரால் - ஒரே
சீர்பாத குலமாக நான் வகுத்து
பார்போற்றும் ஈழத்தில் வாழ்கவென்று - அவன்
பகர்ந்தனன் கொடியும் விருதுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. அரவிந்த மலரும் செங்கோலும் - கொடி
அனைத்தும் ஒன்றாய் அமைந்திருக்க
அரசகுலத்தவர் தங்களுக்கு - மன்னன்
அமரர்கள் என்னும் மதிப்பளித்து

141. அந்தணர் தமக்கு பூணூலும் - மற்ற
அம்பட்டருக்கு கத்தரிக்கோலும்
வேந்தர்க்கு செங்கோல் என்று - மன்னன்
மேளம்தான் வள்ளுவர் தமக்கென்று

142. தட்டார்க்கு குறடுஎன்றுமன்னன் - மற்ற
சாணார்க்குக் கத்தியென்றுசொல்லி
செட்டி குலத்தார்க்கு தோடு தராசு - மற்ற
சேணியருக்கு நூலச்சியென்றும்

143. வண்ணார்க்கு கல்லு என மொழிந்து - அவன்
வணிகருக்குச் செக்கு எனவழங்கி
சுண்ணாம்பு செய்யும் கடையருக்கு - மன்னன்
கூடையும் விருதாய்த் தான் வழங்கி

144. பண்டாப்பிள்ளைக்கு கைப்பிரம்பு - மற்ற
காராளருக்கு மேழிசுழி
கண்ணான எழுத்தாணி முக்குகற்கும் - இன்னும்
கமல மலராம் கோயிலர்க்கு

145. தோணி கரையார்க்கு என்று சொல்லி - மன்னன்
தொப்பி துலுக்கர்க்கு என வழங்கி
நாணி வில்லம்பு வேடுவர்க்கு - என்று
நல்லபடியவன் தான் புகன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. குயவர்க்கு கும்ப குடம் என்று - இனித்
திமிலர்க்கு பால் முட்டியென்று சொல்லி
விமலர்க்கு மத்து விருது என்று - அன்று
விருப்பம்போல் மன்னவன் தான்வழங்கி

147. செப்போட்டில் செந்தமிழால் எழுதி - மன்னன்
தேசத்திலுள்ளோர் அறியும்படி
எப்போதும் சீர்பாத குலம் நீங்கள் - இனி
ஏதோவோர் பேதமும் இல்லையென்றான்.

148. மனுநீதி தவறாத சோழர் குலம் - என்று
மகிழ்வோடு இங்கே வாழ்ந்திருந்து
இனங்களில் பிரிவு இல்லாமல் - நீங்கள்
இன்புற்றிருக்க வேண்டுமென்றான்

149. அத்தனை வேலையும் தான் முடித்து - மன்னன்
அன்பு மனைவி தனைநோக்கி
இத்தனை நாளும் இங்கிருந்தோம் - இனி
இல்லாளே நம்மிடம் செல்வோம்மென்றான்

150. சொந்தமென்று அன்றுவந்தவரை - விட்டு
தோகையும் பிரிய மனமுமின்றி
சிந்தையில் வேதனை கொண்டவளாய் - அன்னை
திரும்பவும் வந்து போவேனென்று

151. மங்கை மகராணி வணங்கிவந்த - அந்த
வலுமிக்க - தங்க வேலதனை
உங்களிடத்திலே நான் தாறேன் - இதை
உளமார வணங்கி வாருமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. மனமீய்ந்து அன்னை அளித்துவிட்டு - அந்த
மக்களிடம் விடை பெற்றுக் கொண்டு
மனம் போல சிங்கை நகர் நோக்கி - மன்னன்
மங்கையை அழைத்துச் சென்றானே

153. அங்கேயிருந்து சிலகாலம் - மன்னன்
ஆட்சிசெலுத்தும் நாளையிலே
தங்குமிடைடையின்றி யுத்தம் செய்ய - அந்த
தலைக்கனம் கொண்ட பாண்டியனும்

154. எண்ணற்ற போர்க்களம் வெற்றிகண்டு - அவன்
இரு தோளும் தினவு தானெடுக்க
பொன்னான ஈழ நாடுதேடி - அன்று
போர்க்கோலம் கொண்டு பாண்டியனும்

155. சீ மாறன் சீ வல்லவனும் - வந்து
சிங்கை நகரினைத் தான் வளைக்க
ஏமாந்து போனோமே என்று செல்லி - மன்னன்
ஏற்றதோர் முடிவு தானெடுத்தான்

156. ஜெயதுங்க பரராசசிங்கனெனும் - அந்த
வீரம் நிறைந்த வாலசிங்கன்
அயலான் தனக்கு அடிபணியேன் - எந்தன்
ஆண்மையைக் காட்டத்துணிந்துவிட்டேன்

157. மன்னன் உரைத்ததைக் கேட்டதுமே - அந்த
மடத்தை மனது மிகவாடி
என்மனம் நோகச் சொல்லாதீர் - நாதா
எப்பவும் உம்மோடு நானிருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158. கன்றுக்கு மகனுயிர் தானம் செய்த - அந்த
கர்ணபரம்பரை வந்தவளே
இன்றோடு நாமும் ஓடிவிட்டால் - உலகு
இல்லாதபேச்செல்லாம் தான்பேசும்

159. ஆண்டி போல வந்த பாண்டியனும் - என்னை
தேடியும் காணாமல் நாம் ஓடி
மாண்டாலும் எனக்கோர் இழுக்கிருக்கும் - அதை
மங்கையே நீயும் - தனறிவாய்

160. உங்களை விட்டு நான்போகேன் - எந்தன்
உயிரே என்னை அனுப்பாதீர்
சங்கமமாவோம் ஒன்றாக - என்மேல்
சற்று கருணை காட்டுமென்றாள்

161. அங்கத்தில் பேர்பாதி தான் கொடுத்த - அந்த
ஆதிசிவனும் உமையும்போல்
தங்கமே என்னாளும் நாமிருப்போம் - இந்த
தரணி உள்ள காலம் மட்டும்

162. சிங்க நகர் விட்டு இப்போது - எந்தன்
செல்வமே கதிரமலை சென்று
அங்கு நீ வாழலாம் நான்வருவென் - இப்போ
ஆரணங்கே அங்கு செல்லும் மென்றான்

163. பிரிய மனமும் இல்லாமல் - அந்த
பெண் கொடி சீர்பாத தேவியாரும்
அரியாசனத்திலே வீற்றிருக்க - எந்தன்
அப்பனே அங்கு வாருமென்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. செல்வமே சொல்லக் கேளும்மடி - நான்
செய்யாத செயல் செய்யப் போகப்போறேன்
நல்லதோ கெட்டதோ நானறியேன் - கண்ணே
நம்மை வேலன்தான் காக்கவேணும்

165. என்று மன்னவன் தான் புகன்று - கண்ணே
இனிமேல் எங்கே நாம் காண்போமென்று
அன்போடு தழுவி முத்தமிட்டு - அந்த
அம்மையை மன்னவன் அனுப்புதற்கு

166. கதிரமலை நோக்கிப் போங்களென்று - அவன்
காரிருள் சுரங்கப் பாதையிலே
சதி செய்யா நம்பிக்கை கொண்டோரும் - சில
சாசனங்களோடு போங்களென்றான்.

167. இதுவரை பகைவர் இல்லையென்று - நானும்
இன்புற்று இதுவரை வாழ்ந்திருந்தேன்
புதுமையாய் போர்க்களம் நான் கண்டு - இனி
போவது வீர சுவர்க்க மென்று

168. அஞ்சாமல் போர்க்கோலம் தான்பூண்டு - அவன்
ஆளணி வெற்றி முரசொலிக்க
நெஞ்சுறுதியும் பூண்டு கொண்டு - மன்னன்
நேராகப் போர்களம் சென்றனனே

169. பாண்டியன் படையோடு சோழபடை - அங்கு
பலபல யுத்தங்கள் தான் புரிய
அன்று தான் போர்க்களம் கண்டமன்னன் - சற்று
அதிர்ச்சியினாலே நிற்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. சந்தர்ப்பம் இதுதான் எனவுணர்ந்து - அந்த
சதிகாரப் பாண்டியன் வாளெடுத்து
குத்தினான் வெட்டினான் கொக்கரித்தான் - அவன்
கொஞ்சமும் இரக்கம் இல்லாமல்

171. பேரோடும் புகழோடும் வாழ்ந்து வந்த - அந்த
பெருமையுடைய வாலசிங்கன்
வீரசுவர்க்கம் தான் புகுந்தான் - தன்
விதிவசம் இப்படி ஆனதென்று

172. வானில் பறக்கும் திறமிருந்தும் - எங்கள்
வாலசிங்க மன்னன் ஓடாமல்
மானத்தைக்காக்க போர் புரிந்து - அவர்
மறைந்தாலும் பெருமை எனநினைத்து

173. மாண்டவன் உடலை தானெடுத்து - அந்த
மற்றைய வீரர்கள் தான்சுமந்து
மீண்டனர் கதிரமலை தேடி - இது
விதியின் வசம்தான் எனவுணர்ந்து

174. கண்டாளே சீர்பாத தேவியாரும் - தன்
கண்ணான கணவன் தன்னுடலை
இன்றோடு நானும் இறப்பேனென்று - அவள்
இதயம் துடித்துக் கொதித்தலற

175. சொந்தம் பந்தமென்று வந்த மக்கள் - அன்று
சோகக்கடலிலே தானீந்த
அந்த மன்னவன் தன்னுடலை - உண்ண
அக்கினி தேவனும் காத்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176. உயிறற்ற உடலை வைத்திருந்து - இனி
ஒன்றுமே ஆவது இல்லையென்று
வயிரநெஞ்சுள்ள வாலசிங்கன் - தன்னை
வாழ்த்திய சிதையிலே தீ மூட்ட

177. அக்கினி தன்னை வலம் வந்து - அந்த
அன்னை சீர்பாத தேவியாரும்
இக்கணமே நானும் போறேனென்று - அவள்
இன்பமாய் தீயிலே தான்கலக்க

178. அன்போடு அக்கினி வரவேற்று - அந்த
அம்மையின் உயிரைத் தான் பிடித்து
நன்றாக வைகுந்தம் போங்களென்று - அது
நல்லாசி கூறித் தானனுப்ப

179. வாலசிங்க மன்னன் கோட்டையில் - அன்று
வலுவேடு பறந்த பனைக்கொடியை
காலனாய் வந்த பாண்டியனும் - அது
கண்ணுக்குத் தெரியக்கூடாதென்று

180. புயபலம் தந்தபரிசு என்று - அவன்
புன்னகையோடு தானகற்றி
கயல்க் கொடியேற்றித் தான்மகிழ்ந்து - அவன்
கடமையின் வீரத்தைப் போற்றினனே

181. நாடுநகரெல்லம் தானிழந்து - அன்று
நல்லபடி சொர்க்கம் தான்புகுந்தும்
தேடினாள் செல்வத்தாய் சீர்பாதகுலம் - இன்றும்
சிதையாமல் மென்மேலும் ஓங்கிநிற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

182. அன்னையவளோடு அன்று வந்து - இன்றும்
அழியாமல் ஓங்கி வளர்ந்திருக்கும்
கன்னித்தமிழர் சீர்பாதகுலம் - பின்பு
கருத்து வேறுபாடு கண்டு

183. ஒற்றுமை நீங்கிப் பிரிவு கண்டு - சில
ஒவ்வாத செயலும் வந்ததினால்
பற்றோடு சிந்தன் வேலேடுத்து - அவன்
பாதையாய்க் கரையோரம் போகையிலே

184. மண்டு மரமும் மணல்த்திடலும் - நல்ல
மனமகிழ்தில்லை மரமும்கண்டு
அன்போடு தங்க வேலாயுதத்தை - அவன்
யாருமேகாணாமல் தான் மறைத்து

185. இறையருள் கூடி வரும்வரைக்கும் - வேலா
இங்கேயே அமரும் என்று சொல்லி
துறைநீலாவணை தேடிச் சென்று - அவன்
சுற்றத்தார் தன்னோடு வாழ்கையிலே

186. வேடர்கள் வேலினைக் கண்டு கொண்டு - இங்கு
வேலர் இருக்கிறார் என்று சொல்லி
கூடாரமாய் கொத்துப் பந்தலிட்டு - அன்று
கூப்பினர் இருகரம் தாழ் பணிந்து

187. வேலினை வேடுவர் கண்டசெய்தி - அப்போ
விரைவாகச் சிந்தனின் செவி சுவைக்க
ஆலயம் அமைக்க வேண்டுமென்று - அவன்
அண்டினோர் தன்னையும் தானழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188. தில்லை மண்டூரில் அமர்ந்திருக்கும் - அந்தச்
சிங்காரத்தங்க வேலனுக்கு
எல்லோரும் சேர்ந்துமுடிவெடுத்து - நல்ல
ஏற்றதோர் ஆலயம் தானமைத்து

189. கப்புகனாராய்த் தானமர்ந்து - சிந்தன்
கருணைவேண்டித் தாழ்பணிந்து
எப்போதும் மௌனமாய்ப் பூசைசெய்து - அவன்
எழில்வேலன் அருள்பெற்று வந்தனனே

190. மன்னனும் சீர்பாத தேவியாரும் - அன்று
மறைந்து கொஞ்ச நாள் சென்ற பின்பு
எண்ணம் போல் மக்கள் வாழ்வதற்கு - நல்ல
ஏற்ற இடமெல்லாம் தேடினரே

191. வெள்ளை மணலும் குளக்கரையும் - மற்ற
வேகாவெயில் தாங்கும் மரநிழலும்
உள்ளத்தை கொள்ளை கொள்ளுமிடம் - என்று
உகந்து மக்கள் குடியேறி

192. அருமையாய் இருந்த மணல் வெளிக்கு - அன்று
அழகான நாமம் தேர்ந்தெடுத்து
குருமண் என்று நாமமிட்டார் - இன்று
குருமண் வெளியாக மாறினதே

193. அதிலே அவனும் குடியிருந்தால் - நாம்
அதற்கிடையில் அமைந்த இடம்
வதிவிடம் அமைக்கச் சிறந்ததென்று - அன்று
வந்தவர்கள் நீலன் துறைநாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

194. துறை நீலன் அணையென்ற பெயரோடு - அன்று
துணையாகப் பலபேரை அணைத்த இடம்
துறை நீலாவணையென்ற பேரோடு - இன்று
தூய தமிழ் நாமம் பெற்றதுவே

195. நாமும் ஓரிடம் பிடித்தால்தான் - இனி
நமது சந்ததி வாழுமென்று
தாமும் தமக்குச் சார்ந்தவரும் - வந்து
சந்தோஷமாகக் குடியிருந்தது

196. சேனை செய்ய சிறந்த இடம் - என்ற
சிந்தனையோடு பழையன் வந்து
ஏனைய மக்களும் வந்துபோகும் - துறை
எல்லாம் காக்கக் குடியமர்ந்து

197. தினை சோழம் வரகு குரக்கன் என்று - அன்று
குறைவின்றிப் பயிர் செய்து வந்ததினால்
சேனைப் பழையன் குடியென்று - அன்று
சிறந்த நாமமும் பெற்றதுவே

198. காலப்போக்கிலே ஓடுகின்ற - இந்த
கன்னித்தமிழ்மேல் இச்சையினால்
பலபல செல்வம் நிறைந்த இடம் - இன்று
பண்பான சேனைக் குடியிருப்பாம்

199. அந்த இடத்தில் வாழ்பவர்கள் - இனி
அங்கேயே வாழமட்டும் என்று எண்ணி
இந்த இடமும் உகந்ததென்று - அன்று
இருந்தார்கள் நாவிதன் வெளிதேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200. இனசனம் தன்னோடு வந்தவர்கள் - அங்கு
இறுக்கமாய் அங்கு வாழ்க்கையிலே
மனமுவந்து நாம் வாழ்வதற்கு - இப்போ
வந்தது குடியேற்றத் திட்டமென்று

201. விருப்பம் போல் எங்கும் குடியேறி - மக்கள்
விதைத்தார்கள் சீர்பாத குலம்பெருக
மருவிய பலரையும் உள்வாங்கி - அது
வளர்ந்தது இப்போ கடல் கடந்து

202. அறியாத மூடனாய் இருந்தாலும் - பிறர்
ஆக்கிய நூல்களில் சொல்லிவைத்த
அறிவுச் சொற்களைக் கவியாக்கி - நான்
ஆக்கிய நூலில் பிழைபொறுப்பீர்

203. வரலாற்றை வாசித்தறிந்தோரும் - அதை
வகுத்துத் தொகுத்து உரைப்போரும்
ஆர அமர ஆராய்ந்து இன்னும் - ஆவது
என்ன எனவுரைப்பீர்

204. அழகுதமிழால் வரைந்தெடுத்த - இந்த
அன்னை சீர்பாத தேவி வந்த
பழம் தமிழர் வரலாற்றை - நானும்
பாடினேன் என்மேல் குறைபொறுப்பீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வெளியீடுகளாக இதுவரை.....

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னுஞ்சல், வைரவர் அகவல்.

02. அம்மன் அருட்பாகங்கள், ஆதிசிவன் அருட் காவியம்.

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் பத்து, மயானபத்து.

04. சேனைக்குடியிருப்பு முத்துவிநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்.

06. கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைப்பத்து, வளிநடைக்கும்மி.

07. கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னுஞ்சல்.

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி.

09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி.

10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி.

11. தசவதாரம் கும்மிப் பாடல்கள்.

12. கண்ணப்பநாயனார் கும்மிப் பாடல்கள்.

13. காரைக்காலம்மையார் கும்மிப்பாடல்கள்.

Brilliant Prenters - Kalmunai - 067 2229778

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org